**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**DW6- OS. No. 250/2017**

2024 ம் ஆண்டு மார்ச் மாதம் 12 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி கூடுதல் சார்பு நீதிபதி திருமதி.எம்.மேகலா மைதிலி பி.ஏ.பி.எல் முன்னிலையில் திருமதி.ரேகா கிரேடு 2 பேன்ச் கிலர்க் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : திரு.திருமுருகன் | தொழில் : |
| த/பெ. : திரு, குருசாமி | வயது : 51 |
| முகவரி : | |

**அழைப்பாணையின் பேரில் பிரதிவாதி தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

நான் கோவை மாவட்ட தொழில் மையத்தில் பொது மேலாளராக பணிபுரிந்து வருகிறேன் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கவும் ஆவணம் தாக்கல் செய்யவும் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டு இருந்தது. அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் 2007-2008 க்கு உரியது என்பதால் தமிழ்நாடு அரசு வழிகாட்டுதல் Manual படி 2014 ல் மேற்படி ஆவணங்கள் அழிக்கப்பட்டுவிட்டது. அது குறித்து பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அது பிரதிவாதி தரப்பில் **Ex.Y7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.**

1. நான் தாக்கல் செய்த பிரமாண பத்திரிக்கையில் ஆவணங்கள் அழிக்கப்பட்டதற்கான எண் குறிப்பிடப்படவில்லை. யார் முன்னிலையில் அழிக்கப்பட்டதும் அதற்கான தீர்மானங்களும் குறிப்பிடப்படவில்லை. எந்த தேதியில் அழிக்கப்பட்டதற்கான விவரமும் குறிப்பிடப்படவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதி 2க்கான ஆவணங்களை திருப்பூர் மாவட்ட தொழில் மையத்திற்கு அனுப்பி வைத்ததாக குறிப்பிட்டு காட்டப்படவில்லை என்றால் ஆமாம். பாரா 3ல் குறிப்பிடப்பட்டுள்ள கடிதத்தின் நகல் இணைக்கப்படவில்லை என்றால் ஆமாம். உதவி மேலாளர் தாக்கல் செய்த பிரமாண பத்திரிக்கையில் 18.12.2018ல் ஆவணங்கள் அழிக்கப்பட்டதாக

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கடித எண் 2691/2021-22 ஆனது 29.11.2023 தேதியில் தான் அழிக்கப்பட்டதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது திருப்பூர் மாவட்ட மேலாளர் அனுப்பிய கடிதத்தின் எண் ஆகும். 10 ஆண்டு முடிவில் கோப்பு அழிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார். கோப்பு அழிப்பட்ட தேதி குறிப்பிடப்படவில்லை. அவரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்த்து சிகிச்சையின் முடிவில் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என சான்று அளித்துள்ளேன். உண்மையிலேயே மேற்படி ஆவணங்கள் 2018 ல் அழிக்கப்பட்டு இருந்தால் அது குறித்து கோவை தொழில் மையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டு இருக்கும் என்றாலும் இல்லை என்பதால் தான் தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் Ex.Y6 ஆவணத்தில் Form A ல் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் முகவரி என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் M/s.Bloom knit Finishers 15/8 Kuppana Chettiyar Street, Tiruppur-641604. தற்போது என்னிடம் காட்டப்படும் பி.த.சா 1 முதல் 5ல் நிறுவனத்தின் பெயர் மற்றம் முகவரி என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் M/s.Bloom knitt Finisher No.8 Kuppana Chettiyar Street, Tiruppur-641604. மேற்படி இரண்டும் ஒரே கம்பெனிகளா வேறு வேறு கம்பெனிகளா என்றால் என்னால் அறுதியிட்டு சொல்ல முடியவில்லை. எங்களது அலுவலகத்தில் வழங்கப்பட்ட பகுதி 1 சான்றானது M/s.Bloom knitt Finisher என்ற பெயரில் வழங்கப்பட்டுள்ளது. எனக்கு அனைத்து விவரங்கள் தெரியும் என்றாலும நான் வாதியை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் மேற்கண்டவாறு சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் Ex.Y6 Form E ல் நிறுவனத்தின் பெயர் என்ன காட்டப்பட்டுள்ளது என்றால் M/s.Bloom knit Finishers. அதில் எஸ்,ரேனுகாதேவி க/பெ.லோகநாதன் Managing Partner.

2. ஒரு நிறுவனத்தை பொறுத்த வரை Managing Partner என்பதற்கும் Partner என்பதற்கும் என்ன வித்தியாசம் என்றால் பங்குதாரர் ஒப்பந்தத்திலேயே அதை நிர்ணயம் செய்துவிடுவார்கள். Managing Partner என்றால் அவர் நிறுவனத்தின் அன்றாட வரவு செலவு கணக்குகளை பராமரிப்பதும் வங்கிக் கணக்குகளில் பங்கேற்பதும் குறித்தும் அதில் பங்கு தாரர் ஒப்பந்த பத்திரத்திலேயே குறிப்பிடப்பட்டுவிடும். அந்த பொறுப்பானது பங்குதாரர் ஒப்பத்தத்தில் உள்ள சரத்துக்களை பொறுத்து தான் தீர்மாணிக்க முடியும். Ex.Y6 Form A,E,F,I and Form 5

என்ன காரணத்திற்காக வழங்கப்படுகிறது என்றால் கோப்புகளின் அடிப்படையில் பார்த்தால் VAT பதிவிற்காக வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. Ex.Y6 ல் பக்கம் 1 மற்றும் 13 ல் காட்டப்பட்டுள்ள Form A க்கு என்ன வித்தியாசம் என்றால் பக்கம் 1 ல் உள்ள Form A Dealership பதிவுக்கானது ஆகும். பக்கம் 13 ல் உள்ள Form A Central Tax Registration க்கானது ஆகும். 2 ம் பக்கத்தில் உள்ள ரேனுகாதேவி முகவரி என்ன என்றால் No.30 East Street, Akaragaram, Singanallur,Coimbatore-641005. பக்கம் 47 ல் 1.5.2009 தேதியிட்ட வாடகை ஒப்பந்தத்தில் டி.ரங்கராஜ் த/பெ திருமலைசாமி நாயுடு No.30 East Street, Akaragaram, Singanallur,Coimbatore-641005 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்த பத்திரத்தில் அவர் M/s.Bloom knitt Finisher என்ற நிறுவனத்தின் வாடகைதாரர் என காட்டப்பட்டுள்ளது. அவர் இந்த வழக்கின் 2 ம் வாதியின் தந்தை என்றால் அது பற்றி தெரியவில்லை. அவர் 1998 ல்இறந்துவிட்டார் என்றால் அதுபற்றி தெரியவில்லை.

3. கட்டிடத்தின் உரிமையாளர் ஒரு நிறுவனத்தின் கிளையின் Branch Office உரிமையாளராக செயல்பட முடியுமா என்றால் அது பற்றி தெரியவில்லை. பக்கம் 51 ல் கோவை மாநகராட்சி சொத்து வரி அட்டை இணைக்கப்பட்டுள்ளது அதில் உரிமையாளார் பெயர் ரங்கராஜன் அதில் No.29-30 East Street, Akaragaram, Singanallur,Coimbatore-641005 என காட்டப்பட்டுள்ளது. பக்கம் 55 ல் ஒட்டப்பட்டுள்ள புகைப்படம் எதற்காக ஒட்டப்பட்டுள்ளது என்றால் அது தெரியவில்லை. ஒரு மாவட்டத்தில் பிரதான அலுவலகம் இருக்கம் பட்சத்தில் அதன் கிளை நிறுவனம் மற்றொரு மாவட்டத்தில் ஆரமிக்கப்படுவதாக இருந்தால் அதனை கிளை நிறுவனத்தின் மாவட்ட பொது மேலாளர் உறுதி செய்து பிரதான நிறுவனம் அமைந்துள்ள மாவட்ட பொது மேலாளருக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்றால் எந்த மாவட்டத்தில் கிளை நிறுவனம் ஆரமிக்கப்பட்டுள்ளதோ அந்த மாவட்டத்தின் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். அவ்வாறு பதிவு செய்ததால் தான் மாவட்ட பொது மேலாளர் மேற்படி கிளை நிறுவனத்தை ஆய்வு செய்வார்.

4. அப்போதைய கோவை மாவட்ட பொது மேலாளர் ஜீ,கஸ்தூரி என்பவருக்கு திருப்பூர் மாவட்ட பொது மேலாளர் மகேஸ்வரி கடிதம் அனுப்பியுள்ளார் என்றால் அது பற்றி தெரியவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் திருப்பூர் துணை ஆணையாளர் அனுப்பிய கடிதம் என்றால் அது வணிக வரித்துறையில் இருந்து

அனுப்பப்பட்டுள்ளது. எங்களது அலுவலகத்திற்கும் மேற்படி கடிதத்திற்கும் சம்மந்தம் இல்லை. திருப்பூர் குற்றவியல் நடுவர் எண் 2 நீதிமன்றத்திற்கு அசல் வழக்கு எண் 371/2019 என்ற வழக்கில் அழைப்பாணையை பெற்றுக்கொண்டு அதற்கு என்ன பதில் அளித்தோம் என்றால் அது பற்றி தெரியாது. கிளை அலுவலகம் நிர்வகிக்க வேண்டி கோவை டிக் கொடுக்கப்பட்டுள்ள ஆவணங்கள் சரியாக பரிசீலினை செய்யவில்லை என்றால் அது பற்றி தெரியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கோவை மாவட்ட தொழில் மையத்திலிருந்து திருப்பூர் மாவட்ட தொழில் மையத்திற்கு ஆவணங்கள் மாற்றப்பட்ட விவரத்தை குறிப்பிடப்படவில்லை என்றால் ஆமாம். புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்ட பிறகு நிர்வாக வசதிக்காக கோப்புகள் மற்ற பதிவுகள் ஆகியவற்றை புதிய மாவட்டங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுவிட்டது. பகுதி 1 ஆவணங்களை கோவை மாவட்ட தொழில் மையத்திலிருந்தும் பகுதி 2 ஆவணங்களை திருப்பூர் தொழில் மாவட்ட தொழில் மையத்திலிருந்தும் மத்திய குற்றபிரிவிற்கு வழங்கியுள்ளோம் என்றால் அது பற்றி தெரியவில்லை.

5. டின் நம்பர் என்ன என்ன ஆவணங்கள் சமர்பித்தால் வழங்கப்படும் என்றால் அது வணிக வரித்துறை வழங்கும் எண் ஆகும். அதனால் அது பற்றி தெரியவில்லை. இஎம் பகுதி 1 சான்று மாவட்ட தொழில் அலுவலகத்தில் பெற தேவையான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் அதனுடன் பங்குதாரர் நிறுவனமாக இருந்தால் பங்குதாரர் ஒப்பந்த பத்திரம் இணைக்கப்பட வேண்டும். Bloom knitt finisher என்ற நிறுவனம் கோவை மாவட்ட தொழில் அலுவலகத்தில் பகுதி 1 சான்று 21.9.2007 அன்று விண்ணப்பித்து சான்று பெற்றுள்ளனர். 21.9.2007 க்கு முன்னர் தேதியிட்ட கூட்டு ஒப்பந்த பத்திரம் வாடகை பத்திரம் மற்றும் கூட்டாண்மை ஒப்பந்த பத்திரம் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை அளித்தால் மேற்படி சான்றினை பெற்று இருக்க முடியும். 21.9.2007 க்கு பின்னிட்ட கூட்டாண்மை ஒப்பந்த பத்திரத்தை வைத்து மேற்கண்ட சான்றிதழ் எண் 33/012/11/08909 தேதி 21.9.2007 பெற்றிருக்க முடியுமா என்றால் முடியாது. 2016-17 லேயே எங்களது அலுவலகமும் மாவட்ட வணிக துறையும் மத்திய குற்றபிரிவிற்கு ஆவணங்களை ஒப்படைத்துள்ளதால் மேற்படி நிறுவனம் தொடர்பான ஆவணங்களை அழித்த இருக்க வாய்ப்பில்லை என்றாலும் அழித்துவிட்டதாக வாதிக்கு ஆதரவாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி**

1. திருப்பூர் மாவட்ட தொழில் மையம் எப்போது பிரிக்கப்பட்டது என்றால் 2014 தேதி குறிப்பாக தெரியவில்லை ஆவணங்களை பார்த்து தான் சொல்ல முடியும்.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை**

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

M MEKALA MYTHILI

Digitally signed by M MEKALA MYTHILI
Date: 2024.03.12 18:13:31 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.